பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 10 2026 7 15

புதன்கிழமை காலை

ஆகாஷ்வாணி

(Tune)

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தை சரியான திசையில் சென்று கொண்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. இந்தியா - செக் குடியரசு இடையே வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் உறவுகளை மேம்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

3. பீஹார் மாநிலத்தில் கங்கை ஆற்றில் படகு கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

4. சவூதி அரேபியா மீதான ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் டோனல்ட் ட்ரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

5. உலக ஸ்கேட் விளையாட்டுப் போட்டியில் ஆடவர் சீனியர் ஆயிரம் மீட்டர் பிரிவில் இந்தியாவின் ஆனந்த்குமார் வேல்குமார் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தை சரியான திசையில் சென்று கொண்டிருப்பதாகவும், விரைவில் ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற *Bloomberg* பொருளாதார மாநாட்டில் பேசிய அவர், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகப் ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறினார்.

வர்த்தகப் பேச்சு தொடர்பாக அமெரிக்கா அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருப்பதாகவும், அந்நாட்டுடனான உறவை ஒவ்வொரு நாடும் மறுசீரமைத்துக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க உடனான இந்தியாவின் நல்லுறவு வலுவான நிலையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

சீனா உடனான இருதரப்பு நல்லுறவு குறித்து தெரிவித்த டாக்டர். ஜெய்சங்கர், எல்லையில் அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடரும்வரை எந்த பாதிப்பும் இல்லை என்று குறிப்பிட்டார்.

<><><><><><><>

இந்தியா - செக் குடியரசு இடையே வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் உறவுகளை மேம்படுத்த இருநாடுகளும் முடிவு செய்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செக் குடியரசின் துணை பிரதமர் *Karel Havlicek*, சந்தித்து பேசியது குறித்து திரு. பியூஷ் கோயல், சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே முதலீடு மற்றும் உற்பத்தி துறைகளில் கூட்டுறவை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும், ரயில்வே, போக்குவரத்து, நவீன தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட துறைகளில்

உறவுகளை விரிவுப்படுத்துவது குறித்து விவாதித்தாகவும், அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தகப் ஒப்பந்தத்தின் மூலம்புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி, பொருளாதார பங்களிப்பை வலுப்படுத்துவது என்று இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ப்பட்டதாகவும், திரு. பியூஷ் கோயல் அதில் கூறியுள்ளார்.

<><><><><><><>

உலகளாவிய பாரத் கலாச்சார தொடர்புகள் மாநாட்டிற்கு மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 50 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள், தூதர்கள், அறிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க கலாச்சார தொடர்புகளை உலகளவில் விரிவுப்படுத்தும் நோக்கில் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டில் பங்கேற்பவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி, காணொளி வாயிலாக உரையாற்ற உள்ளார்.

<><><><><><><>

பீஹார் மாநிலம் வைசாலி மாவட்டத்தில் கங்கை ஆற்றில் படகு கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 7 பேர் மீட்கப்பட்டனர்.

*Raghopur* என்ற இடத்தில் சுமார் 20 பேர் அந்த படகில் பயணித்ததாகவும் அதிக எடை காரணமாக ஆற்றில் படகு கவிழ்ந்ததாகவும் மாவட்ட ஆட்சியர் திருமதி. வர்ஷா சிங் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் பலர் சிறுவர்கள் என்றும், மீட்கப்பட்ட 7 பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

படகு விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, முதலமைச்சர் திரு. சாம்ராஜ் சவுத்ரி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

மாநில அரசின் சார்பில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

<><><><><><><><>

எல்லை தாண்டிய தீவிரவாதம், உள்ளிட்ட அனைத்து பிரிவினைவாத வன்முறைகளையும் BIMSTEC அமைப்பின் உறுப்பு நாடுகள் கண்டித்துள்ளன.

புதுதில்லியில் நேற்று நிறைவடைந்த இந்த நாடுகளின் முதலாவது உள்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தில்லி பிரகடனத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்ட விதிமுறைகள் மற்றும் ஐ.நா. வகுத்துள்ள கோட்டுபாடுகளுக்குட்பட்டு தீவிரவாதத்தை எதிர்ப்பது என அதில் கூறப்பட்டுள்ளது.

பிராந்திய அளவிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை BIMSTEC நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல், இணையவழிக்குற்றங்கள், நிதி மோசடி, ஆள்கடத்தல், ஆயுதக்கடத்தல், கடற்கொள்ளை, சட்டவிரோத குடிபெயர்வு மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு இணையதளத்தை தவறாக பயன்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து தரப்பிலும் எதிர்க்கொள்ளக்கூடிய சவால்களை பாதுகாக்கக்கூடிய பிராந்தியமாக வங்காள விரிகுடா மண்டலத்தை இந்த நாடுகள் அங்கீகரிப்பதாக தில்லி பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று ஆந்திர மாநிலத்திற்கு செல்கிறார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் உள்ள கனக துர்கை அம்மன் கோவிலில் குடியரசுத்தலைவர் இன்று மாலை வழிபாடு செய்ய உள்ளார்.

விஜயவாடாவில், ஆந்திர மாநில அரசும் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தேசிய கைவினைக் கலைஞர்களின் கண்காட்சியில் அவர் நாளை பங்கேற்கிறார்.

இந்த கண்காட்சியில் நாட்டின் 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மகளிர் சுயஉதவிக் குழுவினரின் பொருட்கள் இடம்பெறுகின்றன.

<><><><><><><>

தேசிய கப்பல் கட்டும் இயக்கத்தின்கீழ் இந்திய கப்பல்கட்டும் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் சிறப்புக்கடன் காப்பீட்டுத் திட்டங்களை மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனாவால் வெளியிட்டுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற 21 ஆவது கடல்சார் மாநில மேம்பாட்டுக் குழுக்கூட்டத்தில் பேசிய அவர், மத்திய அரசின் இந்தக் காப்பீட்டுத் திட்டங்கள் மூலம் கப்பல்கட்டும் துறை ஊக்கம்பெறும் என்று தெரிவித்தார்.

இந்த காப்பீட்டுத் திட்டங்களுக்கான ப்ரீமியம் தொகைக்கு அரசின் மானியம் வழங்கப்படும் என்றும் திரு. சர்பானந்தா சோனாவால் தெரிவித்தார்.

<><><><><><><>

சவூதி அரேபியா மீதான ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எனினும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக ராணுவ தாக்குதல் நடத்துவது குறித்து எந்த முடிவையும் டிரம்ப் வெளியிடவில்லை.

அமெரிக்காவின் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக சவூதி அரேபியாவின் ரியாத் உள்ளிட்ட நகரங்கள் மீது ஹவுதி குழுவினர் நடத்திய தொடர் ஏவுகணை தாக்குதலில் 15-க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் சேதமடைந்தன. 4 பேர் காயமடைந்தன.

இதனிடையே, சவூதி அரேபியாவுக்கும், ஹவுதி குழுவினருக்கும் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் Esmaeil Baghaei தெரிவித்துள்ளார்.

மோதலுக்கு ராஜ்ஜிய ரீதியிலான தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

<><><><><><><>

காங்கோ நாட்டில் எபோலா தொற்றுத்தாக்குதலால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 9 ஆயிரத்தை கடந்துள்ளது.

இந்த தொற்றால் இதுவரை 4 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

காங்கோவின் ஏழு மாகாணங்களில் பரவியுள்ள இந்த தொற்றை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், சிகிச்சை மையங்களுக்கு வெளியே அதிகளவிலான உயிரிழப்புகள் பதிவாகியிருப்பதாகவும் காங்கோ அரசு தெரிவித்துள்ளது.

<><><><><><><>

ஜம்மு-காஷ்மீர், லடாக், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம்தெரிவித்துள்ளது.

ஹரியானா, சண்டிகர், தில்லி, இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் மேற்கு ராஜஸ்தானில் இடியுடன் கூடிய பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலைமைய அறிக்கை தெரிவிக்கிறது.

கேரளம் தெற்கு உள்கர்நாடகம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

உலக ஸ்கேட் விளையாட்டு போட்டியின் ஆடவர் சீனியர் ஆயிரம் மீட்டர் பிரிவில் இந்தியாவின் ஆனந்த்குமார் வேல்குமார் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

பராகுவேயில் நடைபெற்ற இப்போட்டியில் இவர், ஒரு நிமிடம் 21 விநாடிகளில் பந்தயத்துரத்தை கடந்து இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------

இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையே நான்காவது டுவெண்டி-டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹைதராபாத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்கும்.

ஐந்து போட்டிகளைக்கொண்ட இந்த தொடரில் இந்தியா 2 போட்டிகளில் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

ஐந்தாவது மற்றும் கடைசி டுவெண்டி-டுவெண்டி கிரிக்கெட் போட்டி பெங்களுருவில் வரும் 17 ஆம் தேதி நடைபெற உள்ளது.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - ஒடிசா எஃப்சி அணியை எதிர்கொள்கிறது.

<><><><><>